**செய்தி வெளியீடு எண்: 072** **நாள் : 02.02.2016**

## செய்தி வெளியீடு

சவூதி அரேபிய அமைச்சகத்தின் ஜெத்தா அரசு மருத்துவமனைகளில் பணியாற்றுவதற்கு எல்லா பிரிவுகளிலும் சேர்த்து மொத்தம் 100 அலோபதி மருத்துவர்களுக்கான வாய்மொழித் தேர்வு புதுடில்லியில் 1.2.2016 முதல் 3.2.2016 வரையிலும் மற்றும் பெங்களூருவில் 5.2.2016 & 6.2.2016 ஆகிய நாட்களிலும் நடைபெற உள்ளது.

இரண்டு வருட பணி அனுபவம் மற்றும் 55 வயதிற்குட்பட்ட கண்சல்டண்டுகள் (Consultants), சிறப்பு மருத்துவர்கள்(Specialist), 45 வயதிற்குட்பட்ட ரெசிடெண்ட் மருத்துவர்கள் (எம்பிபிஎஸ் + டிப்ளமோ) மற்றும் 40 வயதிற்குட்பட்ட பொது மருத்துவர்கள் (எம்பிபிஎஸ்) விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.

தேர்ந்தெடுக்கப்படும் ரெசிடெண்ட் மற்றும் பொது மருத்துவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக வளருகின்ற நாடுகளில் பட்டம் பெற்றவர்களுக்கு அவர்களின் பணி அனுபவத்திற்கேற்ப ரூ.91080/- முதல் ரூ.1.45 இலட்சமும், முன்னேறிய நாடுகளில் பட்டம் பெற்றவர்களுக்கு ரூ.1.45 முதல் ரூ.2.48 வரையும், சிறப்பு மருத்துவர்களாக வளருகின்ற நாடுகளில் பட்டம் பெற்றவர்களுக்கு அனுபவத்திற்கேற்ப ரூ.1.84 இலட்சம் முதல் ரூ.3.03 இலட்சமும்,, முன்னேறிய நாடுகளில் பட்டம் பெற்றவர்களுக்கு பணி அனுபவத்திற்கேற்ப ரூ.3.07 இலட்சம் முதல் ரூ.5.09 இலட்சமும், கண்சல்டண்ட் மருத்துவர்களாக இருப்பின் வளரும் நாடுகளில் பட்டம் பெற்றவர்களுக்கு பணி அனுபவத்திற்கேற்ப ரூ.2.42 இலட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.3.98 இலட்சமும், முன்னேறிய நாடுகளில் பட்டம் பெற்றவர்களுக்கு பணி அனுபவத்திற்கேற்ப ரூ.5.01 இலட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.7.59 இலட்சம் வரையிலும் ஊதியம் வழங்கப்படும். மேலும், சிறப்பு தகுதிக்கான சலுகையாக 20 முதல் 50 விழுக்காடு ஊதியத்துடன், இலவச உணவு, இருப்பிடம், விமான டிக்கெட், குடும்ப விசா மற்றும் சவூதி அரேபிய அரசின் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகள் வேலையளிப்போரால் வழங்கப்படும்.

விருப்பமும் தகுதியுள்ள மருத்துவர்கள், தங்களின் முழு விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை ovemcldr@gmail.com என்ற ஈமெயில் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு, 044-22502267/22505886/08220634389 என்ற தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள் மூலமாகவும் அல்லது www.omcmanpower.com என்ற இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண். RC No.BN-0821/CHENNAI/CORPN/1000+/5/308/84, ஆகும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**